**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/s M. DURAIPANDIAN ROUGH STONE AND GRAVEL QUARRY, SF.No. 220/2, 220/3, ALADIPATTI VILLAGE, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 03.11.2022 AT ABOUT 12.00 NOON IN M/S ARULMIGU SRI VARADHARAJAPERUMAL KOVIL NIRVAGA TRUST MANDAPAM, M.REDDIAPATTI, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

| | | |
|---|---|---|
| 1. Thiru J. Ravikumar | : | District Revenue Officer/ Additional District Magistrate, Virudhunagar. |
| 2. Thiru A. Shanmugam | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar. |
| 3. Thiru Kalyana Kumar | : | Revenue Divisional Officer, Aruppukottai. |
| 4. Thiru. Arivalagan | : | Tahsildhar, Aruppukottai. |
| 5. Thiru K. Ganesan | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar. |
| 6. Selvi. V. Kalaijothi | | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar. |
| 7. Public and representatives from industry. | : | 191 Nos (List enclosed) |

The public hearing for obtaining Environment Clearance under EIA Notification, 2006 for the proposed project of M/s M. Duraipandian Rough Stone and Gravel Quarry, SF.No. 220/2, 220/3, Aladipatti Village, Aruppukottai Taluk, Virudhunagar District at M/s Arulmigu Sri Varadharajaperumal Kovil Nirvaga Trust Mandapam, M.Reddiapatti - 626 118, Aruppukottai Taluk, Virudhunagar District was started at about 12.00 noon on 03.11.2022 with Tamil prayer song. The District Environmental Engineer, Virudhunagar

welcomed the District Revenue Officer / Additional District Magistrate, Virudhunagar, other officials, public and representatives of the project. The District Environmental Engineer explained on the notice issued on the public hearing in the dailies "Dinakaran" and "The Times of India" on 30.09.2022. He further mentioned that information and awareness was created on public hearing through notices to the public. The arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. He informed that the public can express their views on the project after the project authorities explained their project. He added that the written complaints would also be received.

The proceedings of the meeting would be video recorded and sent to SEIAA along with the minutes of the meeting. Then the District Environmental Engineer invited the representative of the project to explain the project.

Thiru. Rajendiran, Environmental Consultant of M/s M. Duraipandian Rough Stone and Gravel Quarry had explained the project and the Environmental Management Plans.

The views on the proposed project expressed by the public orally are as follows:

**1. Thiru. Aaron, Aladipatti**

He informed that he is attending the meeting on behalf of village. Due to blasting the stones affected the houses nearby and the quarrying was stopped. Due to quarrying operation the depth is increased and the ground water becomes salty. There is one agriculture road in the said location without any alternative. If the rock on the either side of the road is quarried the road will be affected. The government officers shall inspect the site directly and ascertain the ground reality. Some quarries are carrying out blasting by using compressor. However a crusher by name S P K crusher in his village carrying out blasting operation by making bores. Due to which all the houses in the village are damaged with cracks. Due to this kind of blasting the ground water quality gets deteriorated and motor pumps are also get affected. It requires about 1 lakh Rupees to repair the pumps. He reported that there is a news column in Thinadhanthi on that day mentioning the action of a village people to vacate the village and to stay in the collector office, since no action is taken against the

quarry on which complaint was made? He further informed that they too require to follow the same. Even much more danger is waiting there. The quarrying activities block the flow of water and on such case how can a lake gets its water. When this quarry is allowed there would be movement of 500 Lorries which would affect the local transport. As the half of the land is already sold for solar panels if the rest of the land also sold to quarries how can we do agriculture? It is said that no animal and bird sanctuaries should be there, within 10Km from the quarry. If it is also stipulated said that the humans also should not be there we'll happily accept. Feedback is not given to those who comment in the public hearing. Our village is totally dependent on agriculture. The appropriate authorities should appraise on the issues due to quarrying activities considering the welfare of the people and arrange for alternative place. He said that he hoped that no permission would be granted and he opposed the project.

**2. Thiru. Esaiah, F/o. Samuel, Kalayarkarisalkulam**

He said that this quarry was started in 2002. This quarry was suspended for a short period. He said that Rameshwaram is at 40 km from the quarry. The construction material like jelly, and M- sand is supplied from here. If the quarries are not allowed the construction works in Rameswaram, Thirumayam and nearby areas would get affected. The proposed project would provide employment to the people in the villages. If the proposed project is stopped, the employment opportunity would be affected. Hence, he welcomed the project.

**3. Thiru. Devandren, Aladipatti**

He said that his land is nearer to the proposed stone quarry. There is no water in his well. He utilizes the quarry water for his lands. So he can able to give job opportunities to 10 people, and so he said that he welcomed the project.

**4. Thiru. Gopal, F/o. Alagarsamy, Ramasamypatti**

He said that they have depended on the stone quarry for 30 years. We had not celebrated deepavali for last 3 years. The quarry would help the livelihood of the people and it will provide employment to the villagers nearby. He said that he welcomed the project.

After this, since no one came forward to give opinion/view on the project, the DEE has informed that the public hearing was concluded. No written

petitions were received from the public. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has concluded the public hearing with vote of thanks. National Anthem was played and meeting came to end.

List of public attended the public hearing and recorded video (CD) of the entire proceedings are enclosed herewith.

Encl.:

1. Public Notice in English and Tamil
2. Attendance
3. Video CD - 1 No

14/11/22
District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Virudhunagar.

14/11/2022
District Revenue Officer/
Additional District Magistrate,
Virudhunagar.

**விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், ஆலடிப்பட்டி கிராமத்தில் புல எண். 220/2, 220/3-ல் தொடங்க உத்தேசிக்கப்பட்ட தி/ள். எம். துரைப்பாண்டியன் கல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 03.11.2022 நண்பகல் 12.00 மணியளவில் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம் எம்.ரெட்டியாபட்டி கிராமத்தில் உள்ள தி/ள் அருள்மிகு ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில் நிர்வாக டிரஸ்ட் மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. ஜெ. ரவிக்குமார் | : | மாவட்ட வருவாய் அலுவலர்/<br>கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்<br>விருதுநகர். |
| 2 | திரு. ஆ. சண்முகம் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | திரு. கல்யாண் குமார் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>அருப்புக்கோட்டை. |
| 4 | திரு. அறிவழகன் | : | வட்டாட்சியர்,<br>அருப்புக்கோட்டை. |
| 5 | திரு. க. கணேசன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 6 | செல்வி. வே. கலைஜோதி | | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 6 | பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் | : | 191 நபர்கள்<br>(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், ஆலடிப்பட்டி கிராமத்தில் புல எண். 220/2, 220/3-ல் தொடங்க உத்தேசித்துள்ள தி/ள் எம். துரைப்பாண்டியன் கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் அருப்புக்கோட்டை வட்டம் எம். ரெட்டியாபட்டி கிராமத்தில் உள்ள தி/ள் அருள்மிகு ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில் நிர்வாக டிரஸ்ட் மண்டபத்தில் 03.11.2022 அன்று நண்பகல் 12.00 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. கூட்டத்திற்கு

வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர் / கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், ஏனைய அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினகரன்" மற்றும் "தி டைம்ஸ் ஆப் இந்தியா" நாளிதழ்களில் 30.09.2022 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார். பிறகு தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியை கேட்டுக்கொண்டார்.

பின்பு தி/ள் எம். துரைப்பாண்டியன் கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர் திரு. இராஜேந்திரன் இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

அதன் பின்பு, இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. திரு. ஆரோன், ஆலடிப்பட்டி

நான் எங்களது கிராமத்தின் சார்பாக வந்துள்ளேன். இந்த குவாரி அமைத்து வெடி வைப்பதால் வீடுகளில் கல் விழுவதாகவும் மேலும் இதனால் ஏற்கனவே இதற்கு முன்பு உள்ள குவாரி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த குவாரி அமைத்து ஆழமாக்குவதால் நல்ல தண்ணீர் உப்பு நீராக மாறிவிடும். மேலும் அங்கு விவசாய ரோடு உள்ளது. இதை தவிர வேறு மாற்று வழி இல்லை எனவும் கூறினார். ரோட்டின் இரு

பக்கங்களிலும் பாறை உள்ளது. மேலும் பாறைகளை தோண்டினால் நிலத்தின் வலுத்தன்மை குறைந்துவிடும் எனவும் கூறியுள்ளார். எனவே அரசு அதிகாரிகள் இதை தெரிந்து கொண்டு நேரடியாக மக்களிடம் கருத்து கேட்டு ஆய்வு செய்ய வேண்டும் என்று தெரிவித்தார். ஒரு சில குவாரிகளில் கம்பிரஷ்சர் வைத்து வெடி போடுகிறார்கள். ஆனால் எங்களது ஊரில் உள்ள எஸ்பிகே கிரசர் போர் போட்டு வெடி வைப்பதால் எங்களது கிராமத்தில் விரிசல் இல்லாத வீடுகளே இல்லை. வீடு மற்றும் மற்றும் விவசாய நிலங்கள் அதிகம் உள்ளதால் இவ்வாறு போர் போட்டு வெடி வைப்பதால் நிலத்தடி நீரின் தன்மை மாறிவிடும் மற்றும் மோட்டார் பம்ப்-ல் பாதிப்பு ஏற்படும். அதனை சரிசெய்ய ஒரு இலட்சம் வரை செலவாகும் எனவும் கூறினார். இன்றைய தந்தி செய்தித்தாளில் ஒரு கிராமத்தில் குவாரிக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அந்த குவாரியை மூடாத காரணத்தினால் ஊர் மக்கள் கிராமத்தை காலி செய்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தங்க போவதாக கூறியுள்ளதாக செய்தி வந்துள்ளது. எனவே நாங்களும் இதுபோல் தான் செய்ய வேண்டும். இந்த கிராமத்தில் அதை விட பெரிய ஆபத்து இருப்பதாக கூறினார். குவாரியினால் நீர்வரத்து அடைத்து விடுவதாகவும் இவ்வாறு அடைப்பட்டால் கண்மாயில் தண்ணீர் வரத்து எப்படி வரும் எனவும் கூறினார். இந்த குவாரிக்கு அனுமதி கொடுத்தால் 500 லாரிகள் வருவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் எனவும் கூறினார். மேலும் ஏற்கனவே பாதி இடத்தை சோலார் பேனல்-க்கு எழுதி கொடுத்தவிட்டதாகவும், மீதி இருப்பதை குவாரிக்கு எழுதி கொடுத்து விட்டால் விவசாயம் எவ்வாறு செய்வது என்று வினவினார். சுற்று வட்டார பகுதியில் 10 கிமீ தூரத்திற்கு விலங்குகள் மற்றும் பறவைகள் சரணாலயம் இருக்கக் கூடாது என்று சொல்கிறீர்கள். மனிதர்களும் இருக்கக் கூடாது என்று சொல்லுங்கள் நாங்கள் சந்தோசமாக உங்கள் கருத்தை ஏற்றுக் கொள்கிறோம். கருத்து கேட்பு கூட்டங்களில் கருத்து கூறுபவர்களுக்கு நடவடிக்கை எடுத்தது தொடர்பாக எந்தத் தகவலும் கொடுப்பதில்லை. எங்கள் கிராமம் முழுவதுமாக விவசாயத்தை நம்பியுள்ளது. உரிய அதிகாரிகள் பொது மக்களின் நலனை அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி பிரச்சனை இல்லாத வேறு இடத்தில் குவாரியினை ஆரம்பிக்கலாம். இங்கே அனுமதி கொடுக்க மாட்டீர்கள் என நம்புகிறேன். இத்திட்டத்திற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என கூறினார்.

## 2. திரு. ஏசையா, த/பெ. சாமுவேல், கல்யாணசுந்தரபுரம்

இந்த குவாரி 2002-ல் ஆரம்பிக்கப்பட்டது. மோட்டார் இயக்குவதால் கொஞ்ச காலம் நிறுத்தி வைக்கப்பட்டது. இராமேஸ்வரம் 40 கிமீ தூரத்தில் உள்ளது. இங்கிருந்து தான் கட்டுமானத்திற்கான ஜல்லி, மணல் செல்லும். அதனால் இது போன்ற குவாரிகள் அமையாவிட்டால் இராமேஸ்வரம், திருமையம் மற்ற இடைப்பட்ட பகுதிகளில் கொத்தனார் வேலை தடைபடும். இந்த குவாரி கண்டிப்பாக இயங்க வேண்டும். இந்த திட்டத்தினால் அருகில் உள்ள கிராமங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இந்த

குவாரியை நிறுத்தினால் வேலைவாய்ப்பு பாதிக்கப்படும் என்று கூறினார். ஆகையால் குவாரிக்கு உரிமம் கண்டிப்பாக வழங்க வேண்டும் என்று கூறினார்.

3. திரு. தேவேந்திரன், ஆலடிப்பட்டி

கல் குவாரி அருகில் தான் என் தோட்டம் உள்ளது. அங்குள்ள கிணற்றில் தண்ணீர் இல்லை. குவாரியில் இருந்து கிடைக்கும் தண்ணீர் வைத்து தான் விவசாயம் செய்கிறேன். அவர் தொழில் செய்வதன் மூலம் எனக்கும் ஆதரவாக இருக்கும். என் மூலம் 10 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே இத்திட்டத்தினை வரவேற்கிறேன் என்று கூறினார்.

4. திரு. கோபால், த/பெ. அழகர்சாமி, இராமசாமிபட்டி

30 வருடமாக கல் குவாரியை நம்பி பிழைத்து வருகிறோம். இப்போது 3 வருடமாக தீபாவளி கொண்டாடவே மிகவும் சிரமமாக உள்ளது. இந்த வருடம் கல் குவாரி நடத்துவதன் மூலம் அருகில் உள்ள கிராமங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். வாழ்வாதாரம் அமையும். இத்திட்டத்தினை முழு மனதோடு வரவேற்கிறேன் என்று கூறினார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறு யாரும் முன்வராததால், கருத்து கேட்பு முடித்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டது. எழுத்துப்பூர்வ விண்ணப்பங்கள் ஏதும் கூட்டத்தில் பெறப்படவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். நாட்டுப்பண் இசைக்கப்பட்டு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ குறுந்தகடு ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இணைப்பு :

1. நாளிதழ்களில் வெளிவந்த பொது அறிவிப்பு
2. வருகை புரிந்தோர் விபரம்
3. வீடியோ குறுந்தகடு - 1

14/11/22

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

14/11/2022

மாவட்ட வருவாய் அலுவலர்/
கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்
விருதுநகர்.